(ஆ) மணம்பூண்டி, தேவனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருணபுரம், ஆதிச்சனூர், வைப்பூர் ஆகிய இடைப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கும் இதனை விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.
(ஆ) தற்சமயம் திட்டம் எதுவுமில்லை.

திரு. கோ. ரகோத்தமன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியத்தின் மூலம் பல இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க திட்டம் தீட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் திட்டம் முடிவுறாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா? அது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, டிசம்பர் 1978-க்குள் இத் திட்டம் முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

திரு. கோ. ரகோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, வேட்டவலம் பேரூராட்சிக்குச் செல்லும் வழியில் மணம்பூண்டி. தேவனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருணபுரம், ஆதிச்சனூர், வைப்பூர் ஆகிய இடைப்பட்ட பஞ்சாயத்துக்கள் இருப்பதால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, வேட்டவலம் குடிநீர் திட்டத்தில் மணம்பூண்டி, தேவனூர் நாயனூர், வீரப்பாண்டி, வைப்பூர் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க வழிவகை செய்கின்ற வகையில் திட்டம் எதுவும் அமலில் இல்லை. ஒட்டம்பட்டு, அருணபுரம், ஆதிச்சனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் அமைக்க வழிவகை எதுவும் செய்யப் படவில்லை.

மன்னான் வகுப்பினர்.

* வினா 15.—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 20—9—1976-ல் மத்திய அரசின் சட்டம், நீதித் துறை "மன்னான்" என்ற பிரிவினரை மலைசாதியினர் பட்டியலில் அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இந்த அறிவிப்பு மாநிலத்திற்கு வரும் கல்வி ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படுமா?

1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) "மண்ணான்" என்ற பிரிவினரை மலைசாதியினர் பட்டியலில் மத்திய அரசு அறிவித்துள்ளதை அரசு அறியும்.

(ஆ) 20—9—76 அன்று இந்திய அரசின் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட 1976-ம் ஆண்டின் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணைச் (திருத்தம்) சட்டம் 27—7—1977 முதல் செயல் முறைக்கு வந்துள்ளது.

திருச்சியில் அரிசனங்களுக்கு வீடுகள்

* வினா 16—திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் அதிகமாக வசிக்கும் அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டம் எப்போது முடியும் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசனங்களுக்குப் பொதுவாக கிராமப்புறங்களில் குறிப்பாக ஏற்கனவே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீட்டு மனைகள் உடனடியாகக் கிடைக்கும் இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. திருச்சியில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்ட திட்டம் தற்போதைக்கு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. சி. மாணிக்கம் : தலைவரவர்களே, திருச்சியில் பல்வேறு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுவசதியின்றி அவ்வப்போது பல தொல்லைகளுக்கு ஆட்படுகிறார்கள். இது ஒரு நீண்டகாலப் பிரச்சனையாக உள்ளது. ஆகவே அரசு விரைந்து கவனித்து இதற்கொரு பரிகாரம் காணுமா என்பதை அரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே கனே, இந்தத் துறை கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்குத்தான் வீடுகட்டித் தரும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நகர்ப்புற பகுதியில் உள்ளவர்களுக்கு குடிசைமாற்று வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டங்களை செயல் படுத்தி வருகின்றன.

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கின்ற திட்டம் அரிசன நல வீட்டுவசதி வாரியத்தின் சார்பிலே கட்டித் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருச்சியைப் பற்றி